**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2024 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16 ஆம் நாள் புதன்கிழமை

**இ.ம.எண்.01/2021 இன் அ.வ.எண்.67/2013**

**(CNR.No.TNCB13-000195-2013)**

1. அபிநிஷா (இறந்தார்)
2. சாந்துமுகமது
3. முகமது மைதீன்
4. பவுஜாமா ... மனுதாரர்கள் /வாதிகள்

/ எதிர் /

1. கிஜார் முகமது
2. அஜரா பீவி
3. அப்துல் குத்தூஸ் (இறந்தார்)
4. சாகுல் அமீது
5. அவாமாபீவி
6. மும்தாஜ்
7. நிலாவர்நிஷா
8. சபியம்மாள்
9. ஆயிசம்மாள்
10. சகீலா
11. மன்சூரா பானு
12. மெகராஜ்
13. அபுதாஹீர்
14. அப்பாஸ் ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

(இ.ம.எண்.04/2024, நாள் 21.08.2024 தேதியிட்ட
உத்தரவின்படி பிராது திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

இம்மனுவானது கடந்த 03.10.2024 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.பாலசுப்ரமணியம் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 5ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.k.தங்கரத்தினம் அவர்கள் முன்னிலையாகியும், 6 முதல் 14 வரையிலான

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அறிவிப்பை பெற்றுக்கொண்டும் முன்னிலையாகதாதால் தோன்றாதரப்பினர்களாக்கப்பட்டும், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட...

**ஆணையுரை**

இறந்த 1ம் வாதியின் வாரிசுகளான 2 முதல் 4 வரையிலான மனுதாரர்களை அசல் வழக்கில் 2 முதல் 4 வரை வாதிகளாகவும், 6 முதல் 14 வரையிலான எதிர்மனுதாரர்களை 6 முதல் 14 பிரதிவாதிகளாகவும் கட்சிசேர்த்து உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 22 விதி 3, 4 பிரிவு 151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** இம்மனுவின் 2 முதல் 4 மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகளாக கட்சி சேர்க்கப்படவேண்டியாவர்களாவர். அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம்கோரி 1ம் மனுதாரரால்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டது. அசல் வழக்கு நிலுவையில் இருக்கும் போது 1ம் வாதி கடந்து 19.07.2020 அன்று 2 முதல் 4 மனுதாரர்களையும், 6 முதல் 10 வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மற்றும் ஒரு முகமுதா என்பவரையும் வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டார். மேற்படி முகமுதா 11 முதல் 14 எதிர்மனுதாரர்களை வாரிசாக விட்டு இறந்துவிட்டார். 2 முதல் 4 மனுதாரர்களுக்கும், 6 முதல் 14 எதிர்மனுதாரர்களுக்கும் கருத்தொற்றுமையில்லை. எனவே, இறந்த 1ம் வாதியின் வாரிசுகளான 2 முதல் 4 வரையிலான மனுதாரர்களை அசல் வழக்கில் 2 முதல் 4 வரை வாதிகளாகவும், 6 முதல் 14 வரையிலான எதிர்மனுதாரர்களை 6 முதல் 14 பிரதிவாதிகளாகவும் கட்சிசேர்த்து உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில்,** இறந்துபோன 1ம் வாதி அபிநிசாவிற்கு, 2 முதல் 4 மனுதாரர்கள், 6 முதல் 10 எதிர்மனுதாரர்கள்

மட்டுமின்றி முகமுதா என்ற ஒரு மகளும் வாரிசாவார். அவரை தரப்பினராக சேர்க்காமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

**4)** இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**5)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

**6)** **<u>பிரச்சினை</u> :**

இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட சங்கதிகளை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்ததில், வழக்கு நிலுவையில் இருக்கும்போது 1ம் வாதியான அபிநிஷா இறந்துவிட்டார் என்றும், அவருக்கு 2 முதல் 4 மனுதாரர்கள் மற்றும் 6 முதல் 14 எதிர்மனுதாரர்கள் வாரிசுகளென்றும், 6 முதல் 14 எதிர்மனுதாரர்களுக்கும், 2 முதல் 4 மனுதாரர்களுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் 6 முதல் 14 எதிர்மனுதாரர்களை பிரதிவாதிகளாகவும், 2 முதல் 4 மனுதாரர்களை வாதிகளாகவும் அசல் வழக்கில் கட்சிசேர்த்து உத்தரவிடவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7.** இறந்துபோன 1ம் வாதி அபிநிசாவிற்கு, 2 முதல் 4 மனுதாரர்கள், 6 முதல் 10 எதிர்மனுதாரர்கள் மட்டுமின்றி முகமுதா என்ற ஒரு மகளும் வாரிசாவார் என்றும், அவரை தரப்பினராக சேர்க்காமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் எதிர்வாதம் வைக்கப்பட்டுள்ளது. பின்னிட்டு, இறந்த வாதி அபிநிஷாவின் விடுபட்டுபோன மகளான முகமுதா இறந்துவிட்டார் என்றும், அவரது வாரிசுகளான 11 முதல் 14 எதிர்மனுதாரர்களையும் இம்மனுவில் தரப்பினர்களாக சேர்த்து இம்மனு திருத்தம் செய்யப்பட்டது. மேற்கண்ட எதிர்வாதம் தவிர 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு எவ்வித எதிர்வாதமும் வைக்கப்படவில்லை.

8) அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரி இறந்து அபிநிஷா என்பவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி இறந்துபோன அபிநிஷாவின் வாரிசுகள் அனைவரும் இவ்வழக்கை முழுமையாக முடிவு செய்வதற்கு அவசிய தரப்பினர்களாவார்கள்.

முடிவில், இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு 2 முதல் 4 மனுதாரர்களை வாதிகளாகவும், 6 முதல் 14 எதிர்மனுதாரர்களை பிரதிவாதிகளாகவும் அசல் வழக்கில் கட்சி சேர்த்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, பின்னர் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N BHARATHIRAJAN
Digitally signed by N BHARATHIRAJAN
Date: 2024.10.16 18:46:51 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

..... இல்லை .....

N BHARATHIRAJAN
Digitally signed by N BHARATHIRAJAN
Date: 2024.10.16 18:46:59 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---

**<u>வரைவு/ அசல் ஆணையுரை</u>**

ஐ.ஏ.1/2021 இன் ஓ.எஸ்.67/2013

நாள் : 16.10.2024

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

---